செ.வெ.எண்.257 நாள்:19.04.2018

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில் கும்பாபிஷேக முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப, அவர்கள் திருக்கோவிலுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

-----

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில் கும்பாபிஷேகம் 27.04.2018 அன்று காலையில் நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் திருக்கோவிலுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

கும்பாபிஷேகத்திற்கு பக்தர்கள், முக்கிய பிரமுகர்கள் உள்ளே வரும் வழி வெளியே செல்லும் வழி, யாக சாலை பகுதி, சிறு சிறு திருப்பணிகள் நடைபெறும் பகுதி கோவிலின் மேல்புரத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் ஆய்வுக் மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோவில் 14 ஆண்டுகளுக்கு பின்னர் வரும் 27ம் தேதி கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவுள்ளது. முன்னதாக 24ம் தேதி யாக சாலை பூஜைகள் தொடங்கப்படும். 2004 ம் ஆண்டிற்கு பிறகு 14 ஆண்டுகள் கழித்து கும்பாபிஷேகம் நடைபெறுவதால் 1 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் இவ்விழாவில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கபடுகிறது. பக்தர்கள் சிரமமின்றி கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வசதியாக குடிநீர் வசதி, தற்காலிக கழிவறை வசதிகள், தீயணைப்பு ஏற்பாடுகள், பக்தர்களுக்கு மருத்துவ வசதி மற்றும் ஆம்புலன்ஸ் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் வந்து செல்ல வசதியாக போக்குவரத்து மாற்றி அமைக்கப்படும். பக்தர்களின் வாகனங்களை நிறுத்த தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. திருக்கோவிலில் 180 திருப்பணிகள் ரூ.4 கோடியே 92 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கும்பாபிஷேக அன்று சிறப்பு பேருந்துகள் இயக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் இந்து சமய அறநிலையத்துறயின் மூலம் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து கும்பாபிஷேக பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. என தெரிவித்தார்.

தொடர்ந்து மாநகராட்சியின் மூலம் குடிநீர் விநியோகித்தல், துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல், தற்காலிக கழிப்பறைகளை அமைத்தல் குறித்தும், தீயணைப்பு அலுவலர்கள் தீ பாதுகாப்பு தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், சுகாதாரத் துறையின் மூலம் அவசர மருத்துவ குழுவினை அமைக்க நடவடிக்கை எடுக்கவும் மற்றும் பல்வேறு துறையினர் கும்பாபிஷேக பணிகளில் இணைந்து மேற்கொள்ள உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது மாநகர கவல் துணை ஆணையர் திரு.சுகுனாசிங்,இ.கா.ப, இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் திரு.பரஞ்ஜோதி, திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் திரு.நாராயணநாயர், திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.கணேசன், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர்கள் திருமதி.ரோஷினி, திரு.சாத்தையா, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், உதவி செயற்பொறியாளர் திருமதி.ஹேமாவதி, இந்து சமய அறநிலைத்துறை உதவி பொறியாளர் திரு.நெல்லை குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.

****************